சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–26.12.2022.

## <u>சாதாரணக்கூட்டம்</u>

திருவள்ளுவர் ஆண்டு, சுபகிருது வருடம் மார்கழி மாதம் 15–ஆம் நாள் (டிசம்பர் திங்கள், நாள்:–30.12.2022) வெள்ளிக்கிழமையன்று மாலை 3.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற இருப்பதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்,
சின்னமனூர் நகராட்சி.

# கூட்டப் பொருள்

**பொருள் எண்.1**

சின்னமனுார் நகராட்சி, ஆணையாளர் அவர்களின் நவம்பர்–2022ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **மன்றம் பதிவு செய்யலாம்** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 311, நாள் 30.12.2022 |
| **தீர்மானம் :** | பதிவு செய்யப்பட்டது. |

*******

**பொருள் எண்.2**

சின்னமனுார் நகராட்சி, பொறியாளர் அவர்களின் நவம்பர்/2022ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **மன்றம் பதிவு செய்யலாம்** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 312, நாள் 30.12.2022 |
| **தீர்மானம் :** | பதிவு செய்யப்பட்டது. |

*******

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்குச் சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திற்கு புதியதாக ஒரு எண்ணம் 7.50HP மோட்டார் வாங்கும் பணி மேற்கொள்ள தொகை ரூ.1,15,000/–க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்) இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.247, நாள்.31.10.2022–இன்படி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்டு கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், சின்னமனூர் – 0.07% சதவிகிதம் மதிப்பீட்டைவிட குறைவு
2. திருமதி.எஸ்.சுப்புலெட்சுமி, சீலையம்பட்டி – 0.04% சதவிகிதம் மதிப்பீட்டைவிட அதிகம்

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல் காணும் திரு.கே.வனராஜ், சின்னமனூர் என்பவரின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**<br>**2.அவரச அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.9283/2022/இ1)** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 313, நாள் 30.12.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.4**

அரசாணை (4D) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC) துறை, நாள்.21.10.2022—இன்படி, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.24, லெட்சுமி நகரில் பூங்கா அமைக்கும் பணிகள் மேற்கொள்ள உள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | **மன்றம் பதிவு செய்யலாம் (ந.க.எண்.1565/2022/இ1)** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | **314**, நாள் **30.12.2022** |
| **தீர்மானம் :** | பதிவு செய்யப்பட்டது. |

*******

**பொருள் எண்.5**

அரசாணை (4D) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC) துறை, நாள்.21.10.2022—இன்படி, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.19, சிவசக்தி நகரில் பூங்கா அமைக்கும் பணிகள் மேற்கொள்ளவுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | **மன்றம் பதிவு செய்யலாம் (ந.க.எண்.1565/2022/இ1)** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | **315**, நாள் **30.12.2022** |
| **தீர்மானம் :** | பதிவு செய்யப்பட்டது. |

*******

**பொருள் எண்.6**

அரசாணை (4D) எண்.23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC) துறை, நாள்.01.12.2022—இன்படி, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022—23—இன் கீழ் இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் மண்சாலையினை தார்ச்சாலையாக மாற்றியமைக்கும் பணி மேற்கொள்ளப்பட உள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | **1.மன்றம் பதிவு செய்யலாம் (ந.க.எண்.8207/2022/இ1)** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | **316**, நாள் **30.12.2022** |
| **தீர்மானம் :** | பதிவு செய்யப்பட்டது. |

*******

**பொருள் எண்.7**

சின்னமனூர் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் டெங்கு நோய் தடுப்பு பணியில் ஈடுபடும் களப்பணியாளர்கள் (DBC) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயிக்கும் தினக்கூலி அடிப்படையில் ஊதியம் நிர்ணயம் செய்து ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் பணிமேற்கொள்ளப்பட்டு வரும் மேற்படி பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.191, நாள்.29.08.2022ல் ஒப்பந்த காலம் 05.01.2023 வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும் கொரோனா தொற்று பரவாமல் தடுக்கவும் மற்றும் கோவிட் 19 தடுப்பூசி தொடர்பான கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால், மேற்கண்ட பணியினை

பழைய ஒப்பந்த விகிதத்திலேயே ஏற்கனவே ஒப்பந்தபணி மேற்கொள்ளும் திரு.R.பரமானந்தன் ஒப்பந்ததாரர் அவர்களின் மூலமாக மேலும் **06.01.2023** முதல் **05.02.2023** வரை ஒரு மாதம் பழைய ஒப்பந்த விகிதத்தில் மேற்படி பணியினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட ஒப்பந்தபணியினை ஒரு மாதம் நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1468/2020/எச்1) |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | **317**, நாள் **30.12.2022** |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.8**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.**35132–/CFC–1**, நாள்.**12.10.2022**–இன்படி சின்னமனூர் நகராட்சிக்கு **15**வது மத்திய மான்ய நிதிக் குழு திட்டம் **2022–23**–இன்படி Urban Health and Wellness Center கட்டும் பணி மேற்கொள்ளப்படவுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.மன்றம் பதிவு செய்யலாம்.<br>2. நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.10071/2022/இ1)** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | **318**, நாள் **30.12.2022** |
| **தீர்மானம் :** | பதிவு செய்யப்பட்டது. |

*******

**பொருள் எண்.9**

சின்னமனூர் நகராட்சி பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டம் (SBM) கீழ் திறந்த வெளியில் மலம் ஜலம் கழித்தல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. இந்நகரில் உள்ள நச்சுத் தடை தொட்டி (Septic Tank ) கழிவு நீரை கால்வாயில் விடுதல் அற்ற நகரமாக ODF+ அறிவிக்கப்படவுள்ளது. இது தொடர்பாக ஆலோசனைகளை பொது மக்கள் தெரிவிக்கும் பொருட்டு தினசரி நாளிதழில் வெளியிட்ட வகையில் ஆன செலவினம் ரூ.**11389/–**ஐ தினமலர் நாளிதழ் என்ற நிறுவனத்திற்கு வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1238 /2015/எச்1) |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | **319**, நாள் **30.12.2022** |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.10**

சின்னமனூர் நகராட்சி பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டம் 2.0ன் கீழ், சின்னமனூர் நகராட்சியை குப்பையில்லா நகராட்சியாக மாற்றிட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக சின்னமனூர் நகராட்சியை குப்பையில்லா நகராட்சியாக அறிவிக்கவும், அதற்கான மத்திய அரசின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், குப்பையில்லா நகராட்சி (Garbage Free City 3 Star) சான்றிதழ் பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆலோசனைகளை பொது மக்கள் தெரிவிக்கும் பொருட்டு தினசரி நாளிதழில் அறிவிப்பினை வெளியிட்ட வகையில் ஆன செலவினம் ரூ.13650/-ஐ AFTERNOON என்ற நிறுவனத்திற்கு வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:-** | மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1238 /2015/எச்1) |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 320, நாள் 30.12.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.11**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு, டெங்கு காய்ச்சல் ஒழிப்பு பணிக்கு வீடுதோறும் புகை அடிக்க பயன்படுத்தப்படும் சிறிய வகை ( Hand Fogging Machine)-10 எண்ணம் மற்றும் அதற்குரிய Gas சிலிண்டர்-300 எண்ணம் விநியோகம் செய்யும் பணிக்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.277 நாள்.30.11.2022ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது அதனைத் தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 20.12.2022இல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்கள் விவரம் | VARUNA ENTERPRISES விலை ரூ 1க்கு) | BALAJEE TRADERS, THENI (விலை ரூ 1 க்கு) |
|---|---|---|---|
| 1. | சிறிய வகை ( Hand Fogging Machine) | 24080 | 24640 |
| 2. | Gas சிலிண்டர் | 450 | 472 |

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:-** | மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் VARUNA ENTERPRISES CHINNAMANUR என்ற நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.9817/2022/எச்1) |

| | |
|---|---|
| **நகர்மன்ற தீர்மான எண்:** | **321**, நாள் **30.12.2022** |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.12**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு, பூங்கா, விளையாட்டு மைதானங்கள் ஆகியவற்றின் விவரங்கள் அடங்கிய வரைபடங்களை அரசிதழில் வெளியிடும் பொருட்டு நகராட்சியில் பதிவு பெற்ற பொறியாளர் மூலம் வரைபடங்கள் தயார் செய்ய உத்தேச செலவினத் தொகை ரூ.**34000/–** க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.** மன்றம் அனுமதிக்கலாம்<br>**2.**அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலவினநடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | **322**, நாள் **30.12.2022** |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.13**

சின்னமனூர் நகராட்சி பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டம் (SBM) கீழ் திறந்த வெளியில் மலம் ஜலம் கழித்தல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. இப்பொருள் தொடர்பாக ஆலோசனைகளை பொது மக்கள் தெரிவிக்கும் பொருட்டு தினசரி நாளிதழில் ஆங்கிலத்தில் வெளியிட்ட வகையில் ஆன செலவினம் ரூ.**9,975/–**ஐ TRINITY PRINTERS AND PUBLISHERS LIMITED நாளிதழ் என்ற நிறுவனத்திற்கு வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | மன்றம் அனுமதிக்கலாம் |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | **323**, நாள் **30.12.2022** |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.14**

சின்னமனூர் நகராட்சி 27 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு, நகரிலிருந்து 4.700 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வேம்படி களத்தின் அருகில் உள்ள முல்லைப் பெரியாற்றிலிருந்து குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், நகர்ப்பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் மின் மோட்டார்கள் மற்றும் நகரில் உள்ள மினி பவர் பம்புகள் 76 எண்ணம் குடிநீர் மற்றும் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேற்படி மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகள் அவ்வப்போது சரி செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் தடையின்றி பொது மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டியது அவசியமாகும். எனவே, மேற்படி பணியினை 2022–23ம் ஆண்டிற்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ளும் பொருட்டு அவ்வப்போது குடிநீர் பணிக்காக பொருத்தப்பட்டுள்ள மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் மினி பவர் பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணியினை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டியும், மேற்படி மின் மோட்டர்களில் ஏற்படும் பழுதுகளை அவசர அவசியம் கருதி உள்ளூர் கடைகளில் விலைப்புள்ளிகள் பெற்று பழுதுப் பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 324, நாள் 30.12.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.15**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் Desilting Auto வாகன எண்.TN60Q4981க்கு FC முடிவடைவதால், புதிய FC எடுப்பதற்கு சில மராமத்து பணிகள் மேற்கொள்ள உத்தேச தொகை ரூபாய்.40,000/–க்கு (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2.மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.3245/2017/இ2)** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 325, நாள் 30.12.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.16**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் Desilting Auto வாகன எண்.TN60Q4963க்கு FC முடிவடைவதால், புதிய FC எடுப்பதற்கு சில மராமத்து பணிகள் மேற்கொள்ள உத்தேச தொகை ரூபாய்.50000/–க்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.3262/2017/இ2)** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 326, நாள் 30.12.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.17**

இந்நகராட்சியின் குடிநீர் விநியோகப் பணிக்கு பயன்படுத்தப்படும் திரவ வாயு குளோரின் சிலிண்டர்கள் (ஒரு வருடத்திற்கு) வாங்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2.மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 327, நாள் 30.12.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.18**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.22083/2022/SBM2, நாள்.13.12.2022–இன்படி சின்னமனூர் நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் (Urban) 2.0– 2022–23–இன்படி பொருள்கள் மீட்பு மையம் (Material Recovery Facilities) கட்டும் பணி மேற்கொள்ளப்படவுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1.மன்றம் பதிவு செய்யலாம்.**<br>**2.நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.10193/2022/இ1)** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 328, நாள் 30.12.2022 |
| **தீர்மானம் :** | பதிவு செய்யப்பட்டது. |

*******

**பொருள் எண்.19**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான புதை குழி வடிகால் திட்டம் (பாதாள சாக்கடை திட்டம்) நடை முறைப்படுத்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பணிபுரிய பணியாளர்கள் ஏதும் நியமிக்கப்படவில்லை. இந்நிலையில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குவதற்கும், நகரில் உள்ள அனைத்து Manhole ஏற்படும் அடைப்புகளை சரி செய்வதற்கும், நகரில் ஏற்படும் கசிவுகளை சரி செய்வதற்கும் மற்றும் Desilting Vehicle வாகனத்தினை இயக்குவதற்கும் போதிய பணியாளர்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தினால் ஒப்பந்த

| | |
|---|---|
| அடிப்படையில் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது ஒப்பந்த காலம் டிசம்பர் 2022 உடன் முடிவடைய உள்ளதால் ஜனவரி 2023 முதல் பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. | |
| **அலுவலகக் குறிப்பு:—** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை நகராட்சியின் பாதாள சாக்கடைத் திட்ட நிதியில் மேற்கொள்ளலாம்.** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 329, நாள் 30.12.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.20**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.31420/2022/.தூ.இ.தி.உ, நாள்.17.11.2022இன்படி, சின்னமனூர் நகராட்சியில் உள்ள அனைத்து சமுதாய கழிப்பிடங்கள் 19 எண்ணம் மற்றும் பொது கழிப்பிடங்கள் 5 எண்ணம், 20செ.மீ அகலம் X 30 செ.மீ நீளம் அளவில் (A4) 150 GSM-ல் ஊதா நிறத்தில் QR Code வெளிப்புறத்தில் 5மி.மீ தடிமனில் 6 செ.மீ X 42 செ.மீ அளவில் வைபர் சீட் என்கிற விபரக்குறிப்புகளின்படி, பொருத்துவதற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.276, நாள்.30.11.2022ல் ரூ.30,000/—க்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. ஆனால், மேற்கண்ட சமுதாயக் கழிப்பறைகள் மற்றும் பொதுக்கழிப்பறைகளில் 27செ.மீ அகலம் x 42 செ.மீ நீளம் QR Code (A3) அளவிற்கு வைபர் சீட் பொருத்தும் பணி செய்ய வேண்டியுள்ளதால் ஏற்படக்கூடிய கூடுதல் செலவினம் ரூ.25,000/—ற்கு (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | மன்றம் அனுமதிக்கலாம். |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 330, நாள் 30.12.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.21**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்கள் தொடர்பாக 2023—2024—ம் ஆண்டிற்கு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியினை தினசரிநாளிதழில் விளம்பரம் செய்வதற்கும் 2022—2023ஆம் ஆண்டிற்கான வரி மற்றும் வரியில்லா இனங்களை செலுத்துவதற்கு விளம்பரம் செய்வதற்கும் மற்றும் தொடர்புடைய பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/—க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3053/2020/அ2) |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 331, நாள் 30.12.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண்.22**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து தெருக்களிலும் போக்குவரத்திற்கு மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இடையூறாக ஆக்கிரமிப்பு செய்து அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கடைகள், படிக்கட்டுகளை அகற்றிட காவல்துறையுடன் சின்னமனூர் நகராட்சி இணைந்து ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து ஆக்கிரமிப்புகளை அகற்றப்பட்ட பின்பு, சாலையின் பக்கவாட்டில் உள்ள மண் குவியல்கள், கற்கள் அப்புறப்படுத்துதல் மற்றும் மேற்படி பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அறிக்கை சமர்பிக்க ஏதுவாக வீடியோ காட்சிகள் மூலம் பதிவு செய்தல் போன்ற தொடர்புடைய பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1.மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2.செலவினத்தை நகராட்சியின் வருவாய் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 332, நாள் 30.12.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.23**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகப் பணியின் போது அவ்வப்போது ஏற்படும் கசிவு மற்றும் உடைப்பு ஆகிய பணிகளை சரி செய்ய தேவைப்படும் பைப் மற்றும் ஸ்பெசல்ஸ் வாங்கி விநியோகம் செய்யும் பணிக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.299, நாள்.30.11.2022ம் தேதி அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணியை செய்வதற்கு 26.12.2022ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திரு.கே.வனராஜ், சின்னமனூர் | ரூ.125781/– |
| 2. | திரு.ஆர்.பரமானந்தன் | ரூ.125961/– |

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1.வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல்காணும் திரு.கே.வனராஜ், சின்னமனூர் என்பவரின் விலைப்புள்ளியின் தொகை குறைவாக இருப்பதால், அன்னாரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.9812/2022/இ2)** |
| **நகர்மன்ற தீர்மான எண்:** | 333, நாள் 30.12.2022 |
| **தீர்மானம் :** | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

(ஒப்பம்) திருமதி.ரா.அய்யம்மாள்,
நகர்மன்றத்தலைவர்
சின்னமனூர் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்,
சின்னமனூர் நகராட்சி